# மணப்பாறை நகராட்சி

**2018 – ஆம் ஆண்டு மே மாதம் (16.05.2018) 16 –ஆம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 16.05.2018 | **பொருள் – 1**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளில் மழையினால் சேதமடைந்த சாலைகளை TURIP-2018-19 ஆம் ஆண்டு நிதியின் கீழ் சரிசெய்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.300.00 இலட்சத்தில் பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 356**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 16.05.2018 | **பொருள் – 2**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட திருச்சி – திண்டுக்கல் பைப்பாஸ் சாலையில் உள்ள குப்பைக்கிடங்கில் பயோமைனிங் மையம் அமைக்கும் பணி ரூ.65.00 லட்சத்திற்கு தயார் செய்யபட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 357**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 16.05.2018 | **பொருள் – 3**<br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி மணப்பாறை நகராட்சியில் ஏற்கனவே வழஙகப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்புகள்போக மீதமுள்ள குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு மதிப்பீடுகள் தயார்செய்து கருத்துரு வழஙக கோரியதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மதிப்பீடுகள் தயார்செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதி தமிழ்நாடு நகர்ப்புற சேவை கட்டமைப்பு நிதி இணையம் (TUFIDCO) மூலம் வட்டி இல்லா கடனாக பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழஙகிட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பிவைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண். 358**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>நகராட்சியின் மொத்த வரிவிதிப்புகள்</td><td>14444</td></tr>
<tr><td>நகராட்சியின் மொத்த வீடுகள்</td><td>11518</td></tr>
<tr><td>வழஙகப்பட வேண்டிய மொத்த இணைப்புகள்</td><td>10214</td></tr>
<tr><td>ஏற்கனவே உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள்</td><td>7337</td></tr>
<tr><td>தற்போது வழஙக வேண்டிய குடிநீர் இணைப்புகள்</td><td>2877</td></tr>
<tr><td>மதிப்பீட்டுத்தொகை</td><td>118.00 இலட்சம்</td></tr>
</table>
<br><u>அலுவலக குறிப்பு</u><br>
அனுமதிக்கலாம்
</td>
<td></td>
</tr>
<tr>
<td>16.05.2018</td>
<td>பொருள் – 4<br>
இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலிருந்து விநியோகம் செய்யும் குடிநீரில் கேஸ் குளோரின் கலந்து விநியோகம் செய்ய ஏதுவாக கேஸ்குளோரினேசன் பிளான்ட் வார்டு எண்.4 பொத்தமேட்டுப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி கேஸ்குளோரினேசன் பிளான்டிற்கு தேவையான கேஸ்குளோரினேசன் சிலிண்டர் R.K.Enterprises, Kerala அவர்களிடமிருந்து ஒரு வருடத்திற்கு வாங்குவதற்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண்.270. நாள் 15.12.2017 –ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இது தொடர்ந்து நடைபெறும் குடிநீர் விநியோக பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி இதற்கு தேவையான கேஸ் குளோரினேசன் சிலிண்டர் மேற்படி நிறுவனத்தாரிடம் தொடர்ந்து வாங்கவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<br><u>அலுவலக குறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. செலவினத் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
</td>
<td>தீர்மான எண்.359<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>16.05.2018</td>
<td>பொருள் – 5<br>
தமிழ்நாடு மாநில எல்லை வரையறை ஆணையர், உறுப்பினர் செயலர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 2016 தேதிய மக்கள் தொகை அடிப்படையில் வார்டு எல்லை மறுவரையறை பணிகள் வார்டு வாரியாக செய்தல் தொடர்பாக திருச்சி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் விளம்பரம் செய்யப்பட்டதில் Bright Advertising நிறுவனத்திற்கு விளம்பர கட்டண தொகை ரூ.37674/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. செலவினத் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>
(ந.க.எண்.1741 /2017 / எப்.1)
</td>
<td>தீர்மான எண். 360<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 16.05.2018 | **பொருள் – 6**<br>பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 அறிவிக்கை தொடர்பான விளம்பரம் திருச்சி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலம் விளம்பரம் செய்யப்பட்டதில் Bright Advertising நிறுவனத்திற்கு விளம்பர கட்டணம் தொகை ரூ.23790/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. செலவினத் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>( ந.க.எண்.182 /2017 / எச்.1) | **தீர்மான எண்.361**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

தனி அலுவலர்
மணப்பாறை நகராட்சி